இத்தற்காலிக விடைக்குறிப்பில் ஏதேனும் மாற்றம் தெரிவிப்பின், தகுந்த ஆதாரங்களுடன் dgedsection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.11.2024-ற்குள் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

CODE : XI 24

வெண் | | | | | | | |

கால அளவு : 2 மணி நேரம்

மொத்த மதிப்பெண்கள் : 100

## (பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கானது)

### தேர்வு எழுதுபவர்களுக்கான அறிவுரைகள்

வினாத் தொகுப்பைத் திறப்பதற்கு முன் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. இவ்வினாத் தொகுப்பு 100 வினாக்களைக் கொண்டது.
2. அச்சுப் பதிவில் ஏதேனும் குறையிருப்பின், உடனடியாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. அனைத்து வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.
4. விடைகளை **OMR** விடைத்தாளில் குறிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளிலிருந்து சரியான விடையினைக் கண்டறிந்து அதனை **OMR** விடைத்தாளில் உரிய வட்டத்தில் கருப்பு நிறப் பந்துமுனைப் பேனாவினால் நிழலிட (Shading) வேண்டும். '✓' மற்றும் '✖' ஆகிய குறியீடுகளை **OMR** விடைத்தாளில் குறிக்கக் கூடாது.
6. விடைகளைக் கண்டறிய மேற்கொள்ளும் வழிமுறைகளை வினாத்தொகுப்பின் கடைசியில் அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பக்கத்தில் செய்து கொள்ளலாம். **OMR** விடைத்தாளிலோ அல்லது தனித்தாளிலோ செய்யக்கூடாது.
7. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பையோ அல்லது **OMR** விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.
8. தேர்வு முடிந்த பிறகு **OMR** விடைத்தாளை மட்டும் அறைக்கண்காணிப்பாளரிடம் கொடுக்கவும். வினாத்தொகுப்பைத் தேர்வர் எடுத்துச் செல்லலாம்.
9. ஏதேனும் கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படின் ஏழு இலக்கப் பதிவெண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

**பக்கத்தைத் திருப்பிப் பதிலளிக்கத் தொடங்கவும்.**

**P.T.O.**

12

இத்தற்காலிக விடைக்குறிப்பில் ஏதேனும் மாற்றம் தெரிவிப்பின், தகுந்த ஆதாரங்களுடன் dgedsection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.11.2024–ற்குள் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

1. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க :

| | | | |
|---|---|---|---|
| (1) | குணக்கு | (i) | தென்றல் |
| (2) | தெற்கு | (ii) | கொண்டல் |
| (3) | வடக்கு | (iii) | கோடை |
| (4) | குடக்கு | (iv) | வாடை |

(அ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

(ஆ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

(இ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

2. 'பொழிந்த' - என்ற சொல்லுக்குரிய சரியான பகுப்பு முறை :

(அ) பொழி + ந் + த

(ஆ) பொழி + த்(ந்) + த் + அ

(இ) பொழி + த்(ந்) + த

(ஈ) பொழிந்து + அ

3. "தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு" - இக்குறளின் ஓரசைச் சீருக்குரிய வாய்பாடு :

(அ) மலர் (ஆ) காசு (இ) பிறப்பு (ஈ) நாள்

4. பொருளைப் பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க :

| | | | |
|---|---|---|---|
| (1) | கொம்பு | (i) | மாலை |
| (2) | தேம்ப | (ii) | மலர்கள் |
| (3) | படலை | (iii) | கிளை |
| (4) | துணர் | (iv) | வாட |

(அ) (1) - (iv), (2) - (ii), (3) - (iii), (4) - (i)

(ஆ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

(இ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(ஈ) (1) - (ii), (2) - (i), (3) - (iv), (4) - (iii)

5. கீழ்க்காணும் தொடர்களுள் இடைச்சொல் தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) சாலச் சிறந்தது

(ஆ) மற்றொன்று கொடு

(இ) இனியன் கவிஞர்

(ஈ) நண்பா எழுது

6. ''மையுடையன நெடுவரையே'' - இம்மெய்க்கீர்த்தித் தொடரின் குறிப்புப் பொருள் :

(அ) மலைகள் இருளாகக் காட்சியளிக்கின்றன

(ஆ) மக்கள் மனதில் இருளில்லை

(இ) மக்கள் கண்களில் மருட்சி இல்லை

(ஈ) நாட்டில் வறுமை இருள் இல்லை

7. காவிரி பாய்ந்தது

கேட்ட பாடல்

நண்பா எழுது !

- இத்தொடர்களின் தொடர் வகைகள் முறையே :

(அ) எழுவாய்த் தொடர், பெயரெச்சத் தொடர், விளித் தொடர்

(ஆ) பெயரெச்சத் தொடர், விளித் தொடர், எழுவாய்த் தொடர்

(இ) எழுவாய்த் தொடர், விளித் தொடர், பெயரெச்சத் தொடர்

(ஈ) வேற்றுமைத் தொடர், எழுவாய்த் தொடர், விளித் தொடர்

8. ''பொருந்து மற்றுஅவன் தன் அருகுற இருத்தல்

போமெனில் பின் செல்வதாதல்''

- என்ற காசிக்காண்டச் செய்யுளின் வழி அறியலாகும் இல்லறப் பண்பு :

(அ) நல்லொழுக்கம் (ஆ) சான்றாண்மை

(இ) விருந்தோம்பல் (ஈ) பொறுப்புணர்வு

9. ''ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழி பெயர்ப்பு'' என்று கூறியவர் :

(அ) மு.கு. ஜகந்நாதர் (ஆ) மணவை முஸ்தபா

(இ) பூமா வாசுகி (ஈ) கணமுத்தையா

10. நாற்று என்னும் சொல் குறிப்பிடுவது :

(அ) புளியின் இளநிலை (ஆ) வாழையின் இளநிலை

(இ) தென்னையின் இளநிலை (ஈ) நெல்லின் இளநிலை

11. தமிழர் பண்பாட்டின் மகுடமாய் விளங்கும் 'பொன் ஏர் பூட்டுதல்' நடைபெறும் திங்கள் :

(அ) ஆடி (ஆ) ஐப்பசி (இ) ஆவணி (ஈ) சித்திரை

12. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | Cabinet | (i) | வணிகக் குழு |
| (2) | Guild | (ii) | சின்னம் |
| (3) | Terminology | (iii) | அமைச்சரவை |
| (4) | Emblem | (iv) | கலைச்சொல் |

(அ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(ஆ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (iii), (2) - (i), (3) - (iv), (4) - (ii)

13. கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கியதால், கூடி இருந்த மக்கள் அமைதியாயினர்.
- இத்தொடரின் வகையைத் தேர்ந்தெடுக்க.

(அ) தனிச் சொற்றொடர் (ஆ) கலவைச் சொற்றொடர்

(இ) தொடர்ச் சொற்றொடர் (ஈ) வினாச் சொற்றொடர்

14. கூற்று : உண்பவரின் இடப்பக்கம் வாழையிலையின் குறுகலான பகுதியும், வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும்.

காரணம் : இலையின் வலது பக்கத்தில் பெரிய உணவு வகைகளையும், இடது ஓரத்தில் சிறிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து, எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள்.

(அ) கூற்றும், காரணமும் தவறு (ஆ) கூற்றும், காரணமும் சரி

(இ) கூற்று தவறு; காரணம் சரி (ஈ) கூற்று சரி; காரணம் தவறு

15. 'உழிஞைக் கொடி' என அழைக்கப்படும் தாவரம் :

(அ) கருநொச்சி (ஆ) முடக்கொற்றான்

(இ) தூதுவளை (ஈ) பிரண்டை

16. உவமைத் தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) தம்பி ! இங்கே வா

(ஆ) கம்பி நீட்டினான்

(இ) கண்ணினைக் காக்கும் இமைபோல

(ஈ) ஆடுகள் மேய்ந்தன

P.T.O.

17. ''ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா'' - என்று பாடியவர் :

(அ) கம்பர்

(ஆ) பாரதிதாசன்

(இ) பெருஞ்சித்திரனார்

(ஈ) பாரதியார்

18. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க :

(அ) கடும்பு - தங்கு

(ஆ) ஆரி - அருமை

(இ) இறடி - தினை

(ஈ) படுகர் - பள்ளம்

19. ''தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது'' என்று பாடிய சங்கப் புலவர் :

(அ) கபிலர்

(ஆ) ஆவூர் மூலங்கிழார்

(இ) நக்கீரர்

(ஈ) ஔவையார்

20. **கூற்று 1** : நேரடியான விடையைத் தரும் வெளிப்படை விடைகள் மூன்று.

**கூற்று 2** : குறிப்பால் விடையைத் தரும் குறிப்பு விடைகள் ஆறு.

(அ) கூற்றுகள் இரண்டும் தவறு

(ஆ) கூற்றுகள் இரண்டும் சரி

(இ) கூற்று 1 சரி; கூற்று 2 தவறு

(ஈ) கூற்று 1 தவறு; கூற்று 2 சரி

21. தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

(அ) உண்டால் அம்ம இவ்வுலகம் - இளங்கோவடிகள்

(ஆ) மோப்பக் குழையும் அனிச்சம் - திருவள்ளுவர்

(இ) விருந்தே புதுமை - தொல்காப்பியர்

(ஈ) மருந்தே ஆயினும் விருந்தொடு உண் - ஔவையார்

22. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | வாட்சன் | (i) | கட்டுரை உருவாக்கம் |
| (2) | இலா | (ii) | இயந்திர மனிதன் |
| (3) | பெப்பர் | (iii) | செயற்கை நுண்ணறிவுக் கணினி |
| (4) | வேர்டுஸ்மித் | (iv) | உரையாடு மென்பொருள் |

(அ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv)

(ஆ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

(இ) (1) - (iv), (2) - (ii), (3) - (i), (4) - (iii)

(ஈ) (1) - (iii), (2) - (ii), (3) - (iv), (4) - (i)

23. தமிழ் நூல்கள் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் எண்ணிக்கையின் அடிப்படையில், மொழிகளின் வரிசை முறை :

(அ) ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி

(ஆ) தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், இந்தி

(இ) ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, மலையாளம்

(ஈ) மலையாளம், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு

24. வடமொழிக் கதைகளைத் தழுவாமல் படைக்கப்பட்ட காப்பியம் :

(அ) பெருங்கதை (ஆ) சீவகசிந்தாமணி

(இ) மணிமேகலை (ஈ) வில்லிபாரதம்

25. ''இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் அல்லன்'' என முடமோசியார் குறிப்பிடும் வள்ளல் :

(அ) பாரி (ஆ) திருமுடிக்காரி

(இ) அதியமான் (ஈ) ஆய் அண்டிரன்

26. ''ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே'' - என்று பாடிய புலவர் :

(அ) க. சச்சிதானந்தன் (ஆ) கா. நமச்சிவாயர்

(இ) கா.மு. ஷெரீப் (ஈ) பாரதிதாசன்

27. ''கோடை விடுமுறைக்குக் கொல்லிமலை செல்கிறேன்'' - என்னும் தொடரில் உள்ள வழுவமைதி :

(அ) கால வழுவமைதி (ஆ) இட வழுவமைதி

(இ) பால் வழுவமைதி (ஈ) திணை வழுவமைதி

28. 'சோவியத் நாட்டு விருது' பெற்ற ஜெயகாந்தனின் படைப்பு :

(அ) உன்னைப்போல் ஒருவன் (ஆ) யாருக்காக அழுதான்

(இ) பிரம்ம உபதேசம் (ஈ) இமயத்துக்கு அப்பால்

29. ''கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்'' என்ற தொடரில் 'கல்லாமை' என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு :

(அ) முதனிலைத் தொழிற்பெயர்

(ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்

(இ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

(ஈ) பண்புப் பெயர்

30. கூற்று : ஒன்றிற்கு மேற்பட்ட எச்சங்கள் சேர்ந்து பெயரைக் கொண்டு முடிவது கூட்டு நிலைப் பெயரெச்சம் எனப்படும்.

சான்று : கேட்ட பாடல்

(அ) கூற்று சரி; சான்று தவறு (ஆ) கூற்று தவறு; சான்று சரி

(இ) கூற்றும், சான்றும் தவறு (ஈ) கூற்றும், சான்றும் சரி

31. ''கொடிது கொடிது வறுமை கொடிது'' - என்ற தொடருக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்க.

(அ) இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

(ஆ) கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு.

(இ) வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

(ஈ) இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு.

32. 'தாழா துஞற்று பவர்' என்ற குறளடி உணர்த்தும் பொருள் :

(அ) பிறர் குற்றம் காண்போர்

(ஆ) தன் குற்றம் காண்போர்

(இ) சோர்விலாது முயற்சி செய்வோர்

(ஈ) பிறருக்கு உதவி செய்வோர்

33. சந்திப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) எட்டுவகை தானியங்களும் குவிந்து கிடக்கும்
கூலகடை தெருகளும் உள்ளன.

(ஆ) எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும்
கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

(இ) எட்டுவகை தானியங்களும் குவிந்துக் கிடக்கும்
கூலக்கடை தெருக்களும் உள்ளன.

(ஈ) எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும்
கூலகடை தெருக்களும் உள்ளன.

34. 'காற்று' என்ற விடைக்கான புதிரைத் தேர்வு செய்க.

(அ) ஓரெழுத்தில் சோலை; இரண்டெழுத்தில் வனம்.

(ஆ) இருக்கும்போது உருவமில்லை; இல்லாமல் உயிரினம் இல்லை.

(இ) நாலெழுத்தில் கண் சிமிட்டும்; கடையிரண்டில் நீந்திச் செல்லும்

(ஈ) பழமைக்கு எதிரானது; எழுதுகோலில் பயன்படும்.

35. "இட்டதோர் தாமரைப்பூ
இதழ்விரித்திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்..." என்னும் பாரதிதாசனின் பாடலடிகள் வெளிப்படுத்தும் பண்பு :

(அ) உதவி செய்தல் (ஆ) ஈகைப் பண்பு

(இ) நன்றியுணர்வு (ஈ) பகிர்ந்துண்ணல்

36. ஒற்றளபெடையில் அளபெடுக்காத மெய் எழுத்துகளின் எண்ணிக்கை :

(அ) 10 (ஆ) 8 (இ) 11 (ஈ) 6

37. 'பெய்த மழை' என்பதன் வினைத்தொகை :

(அ) பெய்யும் மழை (ஆ) பெய்யா மழை

(இ) பெய்கின்ற மழை (ஈ) பெய்மழை

38. தொழிற்பெயருடன் பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

(அ) செப்பல் (ஆ) ஆம்பல்

(இ) வழங்கல் (ஈ) உரைத்தல்

39. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

**கூற்று 1** : உரைநடையும், கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் 'மரபுக் கவிதை' எனப்படுகிறது.

**கூற்று 2** : ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்று அழைக்கப்படும் கவிதை வடிவத்தைத் தமிழில் பாரதியார் அறிமுகப்படுத்தினார்.

(அ) கூற்று 1 தவறு (ஆ) கூற்று 2 தவறு

(இ) கூற்றுகள் இரண்டும் தவறு (ஈ) கூற்றுகள் இரண்டும் சரி

40. கீழ்க்காணும் முல்லை நில முதற்பொருள்களுள் பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

(அ) மாலை (ஆ) கொன்றை (இ) காடு (ஈ) கார்காலம்

41. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

(அ) அவிழ்தல், கனலி, உவா, அழல், கங்குல்

(ஆ) அவிழ்தல், அழல், உவா, கங்குல், கனலி

(இ) அழல், அவிழ்தல், கனலி, உவா, கங்குல்

(ஈ) கங்குல், கனலி, உவா, அவிழ்தல், அழல்

42. ''போனஇடைக் காடனுக்கும் கபிலனுக்கும்
அகத்துவகை பொலியுமாற்றான்''

- என்னும் பாடல் அடியில் அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு :

(அ) முற்றும்மை
(ஆ) உயர்வு சிறப்பும்மை
(இ) எண்ணும்மை
(ஈ) இழிவுச் சிறப்பும்மை

43. ''தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண்''

- எனும் கம்பராமாயணப் பாடலில் கம்பர் காட்சிப்படுத்தும் நிலம் :

(அ) மருதம் (ஆ) முல்லை (இ) குறிஞ்சி (ஈ) நெய்தல்

44. ''தம்மிடம் உள்ள பொருளை மறைத்து வைத்தல்
என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின்
வறுமையின் கொடுமை முழுதும் கெடும்''

- என்னும் பொருள்தரும் குறட்பா இடம்பெற்ற அதிகாரம் :

(அ) இரவு
(ஆ) கயமை
(இ) நல்குரவு
(ஈ) பொருள் செயல் வகை

45. 'அறியேன்' என்னும் பகுபதச் சொல்லில் அமைந்துள்ள இடைநிலை :

(அ) நிகழ்கால இடைநிலை
(ஆ) எதிர்கால இடைநிலை
(இ) இறந்தகால இடைநிலை
(ஈ) எதிர்மறை இடைநிலை

46. பரிபாடலில் கிடைக்கப்பெற்ற பாடல்களின் எண்ணிக்கையைத் தமிழ் எண்ணுருவில் தேர்ந்தெடுக்க.

(அ) எ௦ (ஆ) க௦ரு (இ) உச (ஈ) க௦ரு

47. ''பிழையா நன்மொழி'' என்று வாய்மையைக் குறிப்பிடும் நூல் :

(அ) நற்றிணை
(ஆ) புறநானூறு
(இ) அகநானூறு
(ஈ) இன்னா நாற்பது

48. <u>தென்னன்</u> மகளே ! - அடிக்கோடிட்ட சொல்லால் குறிப்பிடப்படும் மன்னன் :

(அ) சேரன் (ஆ) பாண்டியன் (இ) சோழன் (ஈ) பல்லவன்

49. இறைவனே புலவரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த நிகழ்வில் குறிப்பிடப்படும் புலவர் :

(அ) கபிலர் (ஆ) பரணர்

(இ) இடைக்காடனார் (ஈ) நப்பூதனார்

50. வைகறையைச் சிறுபொழுதாகக் கொண்ட திணை :

(அ) குறிஞ்சி (ஆ) பாலை (இ) நெய்தல் (ஈ) மருதம்

51. ''ஜெயகாந்தன் சிறுகதைகள் உள்ளனவா?'' என்ற வினாவிற்குப் ''பிரபஞ்சன் சிறுகதைகள் உள்ளன'' என்று கூறுவது :

(அ) மறை விடை (ஆ) நேர் விடை

(இ) சுட்டு விடை (ஈ) இனமொழி விடை

52. ''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்''

- இக்குறளில் பயின்று வரும் பொருள்கோள் :

(அ) கொண்டுகூட்டுப் பொருள்கோள்

(ஆ) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

(இ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

(ஈ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

53. 'வெளிப்படைத் தன்மை' என்ற பொருளில் வரும் மரபுத் தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) தாமரை இலை நீர்போல (ஆ) நீர் மேல் எழுத்து போல

(இ) கிணற்றுத் தவளை போல (ஈ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

54. மழை<u>முகில்</u> கண்ட <u>மஞ்ஞை</u> போலக் <u>களி</u> கொண்டனர்

- அடிக்கோடிட்ட சொற்களுக்கான பொருத்தமான சொற்களின் வரிசையைத் தேர்ந்தெடுக்க.

(அ) விண்மீன், அன்னம், இன்பம் (ஆ) மேகம், குயில், உணவு

(இ) மேகம், மயில், இன்பம் (ஈ) விண்மீன், மயில், உணர்வு

55. 'அந்தமான்' - என்பது :

(அ) தனிமொழி (ஆ) தொடர்மொழி

(இ) பொதுமொழி (ஈ) நிலைமொழி

56. சரியான முறையில் அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) கோபல்லபுரத்து மக்கள் கரிசல் எழுத்தாளர் கதையின் ஆசிரியர் கி. ராஜநாராயணன்

(ஆ) கோபல்லபுரத்து மக்கள் கதையின் ஆசிரியர் கரிசல் எழுத்தாளர் கி. ராஜநாராயணன்

(இ) கி. ராஜநாராயணன் கோபல்லபுரத்து மக்கள் கதையின் கரிசல் எழுத்தாளர்

(ஈ) கதையின் ஆசிரியர் கரிசல் எழுத்தாளர் கோபல்லபுரத்து மக்கள் கி. ராஜநாராயணன்

57. ''நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று''

- இக்குறளில் பயின்று வரும் அணி :

(அ) தீவக அணி (ஆ) சொல்பின்வரு நிலையணி

(இ) உருவக அணி (ஈ) உவமையணி

58. பெருவெடிப்புக் கொள்கையை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் காட்டிய நூல் :

(அ) பரிபாடல் (ஆ) நற்றிணை

(இ) குறுந்தொகை (ஈ) ஐங்குறுநூறு

59. **கூற்று** : வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமைவது 'வேற்றுமைத் தொகை' எனப்படும்.

**சான்று** : 'அறிஞரது நூல்' என்பது ஆறாம் வேற்றுமைத் தொகை.

(அ) கூற்று சரி; சான்று தவறு

(ஆ) கூற்றும், சான்றும் தவறு

(இ) கூற்று தவறு; சான்று சரி

(ஈ) கூற்றும், சான்றும் சரி

60. ''அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு''

- என்னும் பாடலடியில் உள்ள 'ஆழி' என்பதன் பொருள் :

(அ) கிணறு (ஆ) ஆறு (இ) ஏரி (ஈ) கடல்

61. ஒன்றிற்கும் மேற்பட்ட பயனிலைகள் கொண்ட தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) இனியனும், மேரியும் பள்ளிக்குச் சென்றனர்.

(ஆ) நிலா பாட்டுப் போட்டியில் பங்கேற்றார்; பரிசு பெற்றார்.

(இ) அப்துல் பேருந்திற்காகக் காத்திருந்தார்.

(ஈ) பகலவன் கடைத்தெருவில் நடந்து வந்தார்.

62. அண்ணம், அன்னம் - பொருள் வேறுபாடறிந்து பொருத்தமான விடையைத் தேர்க.

(அ) பறவை, சோறு (ஆ) சாதம், விருந்து

(இ) மேல்வாய், பறவை (ஈ) சோறு, மேல்வாய்

63. 'கூத்தராற்றுப்படை' என்றழைக்கப்படும் நூல் :

(அ) பெரும்பாணாற்றுப்படை (ஆ) மதுரைக்காஞ்சி

(இ) மலைபடுகடாம் (ஈ) சிறுபாணாற்றுப்படை

64. மலை முகட்டில் மேகம் ________ அதைப்

பார்க்கும் மனங்கள் செல்லத் ________

- விடுபட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தேர்வு செய்க.

(அ) தோற்பவை, தோற்பாவை (ஆ) அவிழும், கவிழும்

(இ) தங்கும், தயங்கும் (ஈ) நிற்கும், துடிக்கும்

65. பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் இருபாலருக்கும் பொதுவாய் வரும் பருவத்தைத் தேர்வு செய்க.

(அ) சிற்றில் (ஆ) ஊசல் (இ) வருகை (ஈ) சிறுதேர்

66. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

(1) பயில்தொழில் - (i) எண்ணும்மை

(2) வண்ணமும் சுண்ணமும் - (ii) வேற்றுமைத்தொகை

(3) மெய்முறை - (iii) பண்புத்தொகை

(4) இன்மொழி - (iv) வினைத்தொகை

(அ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

(ஆ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (iv), (2) - (i), (3) - (ii), (4) - (iii)

67. **கூற்று** : திருந்திய மக்களை மற்ற உயிர்களில் இருந்து பிரித்துக் காட்டுவது மொழி.

**காரணம்** : அது ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறி வதற்குச் சிறந்த வழி.

(அ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

(ஆ) கூற்று சரி; காரணம் தவறு

(இ) கூற்று தவறு; காரணம் சரி

(ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி

68. அரசனின் அறம் சார்ந்த குறியீடுகளாகப் போற்றப்பட்டவை :

(அ) செங்கோல், மணிமுடி

(ஆ) வெண்கொற்றக்குடை, சிம்மாசனம்

(இ) செங்கோல், வெண்கொற்றக்குடை

(ஈ) மணிமுடி, சிம்மாசனம்

69. சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் - நூலாசிரியர் தொடர்பானவற்றுள் சரியான இணை களைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | சாயாவனம் | - | எழில்முதல்வன் |
| 2. | விசாரணைக் கமிஷன் | - | சா. கந்தசாமி |
| 3. | கீதாஞ்சலி | - | கி. ராஜநாராயணன் |
| 4. | சேரமான் காதலி | - | கண்ணதாசன் |

(அ) 1, 2 சரி (ஆ) 2, 3 சரி (இ) 3, 4 சரி (ஈ) 2, 4 சரி

70. ''எனக்கு எழுதித் தருகிறாயா?'' என்ற வினாவிற்கு ''எனக்கு யார் எழுதித் தருவார்கள்?'' என்று விடையளிப்பது :

(அ) உற்றது உரைத்தல் விடை (ஆ) வினா எதிர் வினாதல் விடை

(இ) உறுவது கூறல் விடை (ஈ) மறை விடை

71. சந்திப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) வாய்மையைச் சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

(ஆ) வாய்மையை சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

(இ) வாய்மையை சிறந்த அறமாக சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

(ஈ) வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

72. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் 'குடக்கூத்து' எனக் குறிப்பிடப்படுவது :

(அ) காவடியாட்டம்
(ஆ) தோற்பாவைக் கூத்து
(இ) கரகாட்டம்
(ஈ) சேர்வையாட்டம்

73. "__________ உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

- இக்குறட்பாவில் விடுபட்ட சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(அ) உரிமை (ஆ) வறுமை (இ) சிறுமை (ஈ) அருமை

74. 'பன்மொழிப் புலவர்' என்ற அடைமொழியால் அறியப்படுபவர் :

(அ) க. சச்சிதானந்தன்
(ஆ) துரை. மாணிக்கம்
(இ) க. அப்பாத்துரையார்
(ஈ) அப்துல் ரகுமான்

75. "பார் முழுதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை
சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை"

- இப்புதிர் சுட்டும் விடையைத் தேர்வு செய்க.

(அ) சிலந்தி (ஆ) குயில் (இ) காகம் (ஈ) கழுகு

76. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுக்க.

1. எற்பாடு என்பது சூரியன் மறையும் நேரம்
2. எற்பாடு என்பது மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
3. சிறுபொழுது என்பது ஒரு நாளின் ஆறு கூறுகள்
4. பெரும்பொழுது என்பது ஓராண்டின் ஆறு கூறுகள்

(அ) 1, 2 மற்றும் 3 சரி
(ஆ) 1, 2 மற்றும் 4 சரி
(இ) 1, 3 மற்றும் 4 சரி
(ஈ) அனைத்தும் சரி

77. மென்துகிலாய் உடல்வருடி
வாஞ்சையுடன் மனம் வருடுவது

(அ) தண்ணீர் (ஆ) மழை (இ) காற்று (ஈ) பனி

78. "தகக தகதகக தந்தத்த தந்தகக" - என்று இசை குறித்துத் தம் நூலில் பதிவு செய்தவர் :

(அ) மாணிக்கவாசகர்
(ஆ) ஆண்டாள்
(இ) குலசேகரர்
(ஈ) அருணகிரிநாதர்

79. 'வருக' என்னும் சொல்லிற்கான வேர்ச்சொல் :

(அ) வந்த (ஆ) வா (இ) வந்து (ஈ) வரு

80. 'சொல்' - பற்றிய கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

1. மூவகை இடங்களிலும் வரும்
2. வெளிப்படையாகவும், குறிப்பாகவும் வரும்
3. இரு திணைகளையும், ஐம்பால்களையும் குறிக்கும்
4. உலக வழக்கு, செய்யுள் வழக்கில் வரும்

(அ) கூற்றுகள் 1, 2 மற்றும் 4 சரி (ஆ) கூற்றுகள் 2, 3 மற்றும் 4 சரி

(இ) கூற்றுகள் 1, 2 மற்றும் 3 சரி (ஈ) கூற்றுகள் அனைத்தும் சரி

81. 'காலக்கணிதம்' கவிதையில் இடம்பெற்ற முறையான தொடர் :

(அ) இறந்து விடாது என்மனம் இகழ்ந்தால்

(ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது

(இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்

(ஈ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது

82. பொருத்தி விடையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | துளிர் | (i) | கரும்பு |
| (2) | முறி | (ii) | நெல், புல் |
| (3) | குருத்து | (iii) | புளி, வேம்பு |
| (4) | கொழுந்தாடை | (iv) | சோளம், தென்னை |

(அ) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

(ஆ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (ii), (2) - (iv), (3) - (i), (4) - (iii)

83. சொல்லிசை அளபெடை என்பது :

(அ) செய்யுளில் ஓசை குறையும் போது, அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுப்பது

(ஆ) செய்யுளில் ஓசை குறையாத இடத்தும், இனிய ஓசைக்காக குறில் நெடிலாக அளபெடுப்பது

(இ) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல், எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது

(ஈ) செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகள் பத்தும், ஆய்த எழுத்தும் அளபெடுப்பது

84. சாரைப் பாம்பு என்பது :

(அ) வேற்றுமைத் தொகை (ஆ) இருபெயரொட்டுப் பண்புத் தொகை

(இ) வினைத் தொகை (ஈ) உவமைத் தொகை

85. "நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்

மான விறல்வேள் வயிரியம் எனினே"

- என்ற பாடலடிகளில் குறிப்பிடப்படும் மன்னன் :

(அ) அதிவீரராம பாண்டியன் (ஆ) அதியமான்

(இ) நன்னன் (ஈ) குலேச பாண்டியன்

86. மயங்கொலிப் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.

(அ) கரடிகள் மரத்தின் மீதேறி இலுப்பைப் பூக்களைப் பறித்து உண்ணும்.

(ஆ) கரடிகள் மரத்தின் மீதேரி இளுப்பைப் பூக்களைப் பரித்து உண்ணும்.

(இ) கரடிகள் மறத்தின் மீதேறி இலுப்பைப் பூக்களைப் பறித்து உண்ணும்.

(ஈ) கரடிகள் மரத்தின் மீதேறி இலுப்பைப் பூக்கலைப் பரித்து உண்ணும்.

87. "<u>விதிமுறை</u> கதலி பூகம் கவரிவால் விதானம் தீபம்

<u>புதியதோர்</u> நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த"

- அடிக்கோடிட்ட சொற்களில் அமைந்துள்ள நயம் :

(அ) எதுகை (ஆ) மோனை (இ) இயைபு (ஈ) முரண்

88. பொருந்தாத சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(அ) விளம்புதல் (ஆ) செப்புதல் (இ) இயம்பல் (ஈ) பொருந்துதல்

89. 'ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு' என்னும் இலக்கணம் பொருந்தும் பா வகை :

(அ) வெண்பா (ஆ) ஆசிரியப்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா

90. "பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி" என்று தற்போதைய நாமக்கல் மாவட்டத்தின் கொல்லிமலையைக் குறிப்பிடும் நூல் :

(அ) புறநானூறு (ஆ) ஐங்குறுநூறு (இ) அகநானூறு (ஈ) நற்றிணை

91. ''மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா!'' - என்ற பாடலடியில் குலசேகர ஆழ்வாரால் அன்னையாக உருவகித்துப் பாடப்படுபவர் :

(அ) வைகுந்த பெருமாள்

(ஆ) உலகளந்த பெருமாள்

(இ) திருமலை பெருமாள்

(ஈ) உய்யவந்த பெருமாள்

92. இராஜஸ்தானில் 'கச்சிகொடி' என்று அழைக்கப்படும் ஆட்டம் :

(அ) ஒயிலாட்டம்

(ஆ) தேவராட்டம்

(இ) பொய்க்கால் குதிரையாட்டம்

(ஈ) சேர்வையாட்டம்

93. 'வந்தவர் அவர்தான்' - என்னும் தொடரில் உள்ள 'வந்தவர்' என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு :

(அ) தொழிற்பெயர்

(ஆ) வினையாலணையும் பெயர்

(இ) பண்புப்பெயர்

(ஈ) ஆகுபெயர்

94. ''நன்னர் நன்மொழி கேட்டனம்'' - என்னும் பாடலடி மூலம் வெளிப்படும் சங்ககால மரபு :

(அ) கண்கள் துடித்தல்

(ஆ) கனவு பலித்தல்

(இ) விரிச்சி கேட்டல்

(ஈ) சகுனம் பார்த்தல்

95. 'உரைத்த' - இப்பகுபதத்தில் 'அ' என்பது :

(அ) வினையெச்ச விகுதி

(ஆ) தொழிற்பெயர் விகுதி

(இ) வியங்கோள் வினைமுற்று விகுதி

(ஈ) பெயரெச்ச விகுதி

96. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

''அறிவு விளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகள் உள. ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி.''

(அ) கல்வியும், கேள்வியும் யாவை ?

(ஆ) அறிவு விளக்கம் பெறுவதற்கான வழிகள் யாவை ?

(இ) அறிவு விளக்கம் பெறுவதற்கு வழி யாது ?

(ஈ) அறிவு விளக்கம் என்றால் என்ன ?

97. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

(அ) சூழி - காலில் அணிவது

(ஆ) குழை - காதில் அணிவது

(இ) கிண்கிணி - காலில் அணிவது

(ஈ) குண்டலம் - காதில் அணிவது

98. ''அருங்கல <u>வெறுக்கை</u>யோடு அளந்துகடை அறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்''

- என்னும் சிலப்பதிகாரப் பாடலடிகளில் கோடிட்ட சொல் உணர்த்தும் பொருள் :

(அ) வெறுங்கை (ஆ) வெற்றிலை (இ) விலை (ஈ) செல்வம்

99. 'எல்லாவற்றையும் கொடுப்பவன்' என்று மலையமான் திருமுடிக்காரியைப் பாராட்டுபவர் :

(அ) ஔவையார் (ஆ) கபிலர் (இ) பரணர் (ஈ) நல்வேட்டனார்

100. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.

| சீர் | | வாய்பாடு |
|---|---|---|
| (அ) தார் | - | நாள் |
| (ஆ) பகைக் கு | - | பிறப்பு |
| (இ) பொருள் | - | மலர் |
| (ஈ) உல கு | - | காசு |

-o0o-

## SPACE FOR ROUGH WORK